**காயல்பட்டணம் நகராட்சியின் 19.08.2021ம் தேதிய அவசரக்கூட்டம்**

**மன்றப்பொருள்: 1**

காயல்பட்டணம் நகராட்சியில் கடந்த 40 வருடங்களாக சேகரிக்கப்பட்ட குப்பைகளை (Legacy Waste) நில அளவை எண்.43/1 பப்பரப்பள்ளி (வண்ணாந்துறை வட்டக்கிணறு) பகுதியில் கொட்டப்பட்டு வரப்பட்டுள்ளது. தற்பொழுது நகராட்சிக்கு கடையக்குடி பகுதியில் தனியாக புதிய உரக்கிடங்கு செயல்பாட்டில் உள்ளதால் சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு கருதியும் பொது சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும் தேசிய பசுமைத்தீர்ப்பாயம் (தென் மண்டலம்) வழங்கிய அறிவுறுத்தல்களின்படியும் ஏற்கனவே குப்பைகள் கொட்டப்பட்டுள்ள பப்பரப்பள்ளி இடத்தில் தேங்கியுள்ள குப்பைகளை (Legacy Waste) **Bio Mining** முறையில் அப்புறப்படுத்துவதற்கு ரூ.160.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை சமர்ப்பித்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2134 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

**தனி அலுவலர் (ம)ஆணையாளர்**
**காயல்பட்டணம் நகராட்சி.**

**காயல்பட்டணம் நகராட்சி ஆகஸ்ட் 2021ம் மாத சாதாரண கூட்டம் :–**

மன்றப்பொருள் 1

காயல்பட்டணம் நகராட்சியில் 14வது வார்டுக்குட்பட்ட லட்சுமிபுரம் பகுதி –1ல் 183.30மீட்டர் நீளம் 3.53 மீட்டர் அகலமுள்ள மண் சாலை மற்றும் லட்சுமிபும் குதி–2ல் 82.70 மீட்டர் நீளம் 3.50மீட்டர் (சராசரி) அகலமுள்ள மண் சாலை ஆகிய இரண்டு நகராட்சிக்கு சொந்தமான சாலைகளை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் பேவர் ப்ளாக் சாலைகளாக அமைக்கப்பட்டு தற்பொழுது நகராட்சி வசம் ஒப்படைத்திட தொடர்புடைய துறை மூலம் கருத்துரு சமர்பிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்,

**தீர்மான எண்.2135 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப்பொருள் 2

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார, பொறியில் வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (இணைப்பில் உள்ள பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் அறிக்கை மற்றும் சுகாதார ஆய்வாளர் , பொது பணி மேற்பார்வையாளர் பரிந்துரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து, ஓட்டுநர் திரு. வெ.ராதாகிருஷ்ணன் பெயருக்கு தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 69 B 8679 ஜேசிபி வாகனம் (5.11.20 முதல் 7.6.21) | 3190.00 |
| 2 | TN 92 C 6881 அலுவலக வாகனம் | 160.00 |
| 3 | TN 92 D 0019 | 1050.00 |
| 4 | TN 69 D0054 பொது சுகாதார வாகனம் | 420.00 |
| 5 | TN 69 D0052 பொது சுகாதார வாகனம் | 280.00 |
| 6 | TN 69 D0051 பொது சுகாதார வாகனம் | 450.00 |
| 7 | TN 69 AY 0603 | 330.00 |
| 8 | பேட்டரி டிரை சைக்கிள் (14 வாகனங்கள்) | 2240.00 |
| | **மொத்தம்** | **8120.00** |

**தீர்மான எண்.2136 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

கோப்பு எண். 001/2020/எச்1

மன்றப்பொருள் 3

காயல்பட்டணம் நகராட்சியில் விதி எண். 15ன் கீழ் அவசர அவசியம் கருதி ஆகஸ்ட் 2021ம் மாதத்திற்கு செலவினங்கள் மேற்கொண்டதற்கும், அதற்கான பதிவேடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்.2137 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

மன்றப்பொருள் 4

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் அ5/0417/2021 நாள் 24.08.2021ன்படி, காயல்பட்டணம் நகராட்சி பகுதியில், திரு.முருகன், ரத்தினாபுரி, திரு.நஸ்ரேன், சிங்கித்துறை, மற்றும் திரு.தர்வேஸ் முகம்மது, அப்பாபள்ளி தெரு, ஆகிய 3 நபர்கள் கோவிட்–1 தொற்று காரணமாக இறந்து விட்டார்கள் எனவும் அன்னாரின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்துள்ள நிவாரண நிதி வழங்கும் பொருட்டு, இந்நகராட்சியில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் பட்டியலில் ஏற்கனவே 241 குடும்பங்கள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இந்த குடும்பங்களை முறையே 242, 243 மற்றும் 244 வதாக பட்டியலில் சேர்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2138 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

ந.க.எண். 001/2021/எச்.1

மன்றப்பொருள் 5

பொது மேலாளர், தூத்துக்குடி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், தூத்துக்குடி அவர்களின் பரிந்துரையின் படி, காயல்பட்டணம் நகராட்சி பேருந்து நிலைய வளாகத்தில் சுமார் 400 சதுர அடி பரப்பில் உள்ள இடத்தினை ஆவின் பால் பூத் அமைத்திட, 26.05.2020ம் தேதிய இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.ந.க.எண். இ1/612/2019ன்படி, திரு. எஸ்.சந்தானக்குமார், காயல்பட்டணம் என்பவருக்கு வழங்கப்பட்ட அனுமதியானது, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு, 01.09.2021 முதல் ரத்து செய்து உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2139 மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

கோப்பு எண். இ1/612/2019

**மன்றப்பொருள்: 6**

காயல்பட்டணம் நகராட்சியில் **15th CFC Tied Grant – (Ist Installment) 2020-2021** ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள முதல் தவணை மானியத்தொகை ரூ.57,73,667/-க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 2091 நாள்.31.12.2020ன்படி கீழ்க்கண்டவாறு 4 பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்றும் நிலையத்திற்கு 5000LPM x 70M Head திறனுள்ள ஒரு எண்ணம் horizontal split casing Centrifugal pump விநியோகம் செய்தல் | 9.00 |
| 2 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட தீவுத்தெருவில் 2.00இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டுதல் | 29.00 |
| 3 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கீழலட்சுமிபுரம், இரத்தினாபுரி மற்றும் ஓடக்கரை ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தெக்கத்தொட்டியினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் | 9.90 |
| 4 | காயல்பட்டணம் நகராட்சிக்குட்பட்ட கற்புடையார்பள்ளி வட்டம், உச்சிமகாளியம்மன்கோவில் தெரு மற்றும் கோமான்புதூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தெக்கத்தொட்டியினை சுற்றி பாதுகாப்பு சுவர் கட்டுதல் | 9.90 |
| | மொத்தம் | 57.80 |

மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள நான்கு பணிகளில் வரிசை எண்.2ல் கண்ட பணியான 2.00லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர்த்தேக்கத்தொட்டி கட்டும் பணிக்கு கட்டும் இடத்தில் மண் பரிசோதனை செய்து வடிவமைப்புடன் வரைபடம் (Design & Plan) வழங்கிடுமாறு அரசு பொறியியல் கல்லூரி,திருநெல்வேலியில் கோரப்பட்டது. ஆனால் பணி செய்யப்படும் இடமானது (தீவுத்தெரு) கடற்கரைக்கு மிக அருகில் இருப்பதாலும் அரசு பொறியியல் கல்லூரி,திருநெல்வேலி பேராசிரியர் மற்றும் அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மண் பரிசோதனையின் அடிப்படையிலும் அரசு பொறியியல் கல்லூரி,திருநெல்வேலின் மூலம் பெறப்பட்ட வரைபடத்திற்கு 2020-2021ம் ஆண்டுக்கான பொதுப்பணித்துறை விலைவிகித அட்டவணையின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடானது அனுமதிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக வருவதாலும் 2021-2022 ம் அண்டுக்கான தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை விலை விகிதப்பட்டியல் வெளியிடப்பட்டால் மேலும் மதிப்பீட்டுத்தொகை அதிகரிக்கும் என்பதாலும் **வரிசை எண்.2ல்** கண்ட பணியினை இரத்து செய்திடவும் இரத்து செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு ஏற்ப கீழ்க்கண்டவாறு மூன்று பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காயல்பட்டணம் நகராட்சிக்கான ஸ்ரீவைகுண்டம் பொன்னன்குறிச்சி தலைமை நீரேற்றும் நிலையத்தில் மின் பணியாளர் குடியிருப்பு அருகில் பேவர் பிளாக்கல் பதித்தல் | 10.00 |
| 2 | காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி உரக்கிடங்கு இடத்தில் புதியதாக செட் அமைத்தல் | 10.00 |
| 3 | காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி உரக்கிடங்கு இடத்திற்கு Bailing Machine விநியோகம் செய்தல் | 9.00 |

ஆதலால் நகர்மன்ற தீர்மானம் எண்.2091 நாள்.31.12.2020ன்படி அனுமதிக்கப்பட்ட பணிகளில் வரிசை எண்.2ல் கண்ட பணியினை இரத்து செய்திடவும் அதற்கு பதிலாக மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளையும் அதற்கான மதிப்பீடுகளையும் அங்கிகரிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்.2140மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

**தனி அலுவலர் (ம)ஆணையாளர்**
**காயல்பட்டணம் நகராட்சி.**